வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

Field Work Centre

FWC

தவணைப் பரீட்சை, மார்ச் - 2018
Term Examination, March - 2018

தரம் :- 12 (2019)	கணக்கீடு	மூன்று மணித்தியாலம்

பகுதி I

❖ *1 தொடக்கம் 25 வரையுள்ள எல்லா வினாக்களிற்கும் விடை அளிக்கவும்*

01. நிதிநிலைமைக் கூற்றில் குறித்த விடயமொன்று சொத்து என அடையாளப்படுத்துவதற்குக் கீழே தரப்பட்ட நிபந்தனைகளில் எது அவசியமற்றது?
   1) கடந்தகால கொடுக்கல் வாங்கலின் விளைவினால் எழுதல்
   2) கிரயத்தை நம்பத்தகு முறையில் மதிப்பிட முடிதல்.
   3) எதிர்காலத்தில் பொருளாதர நன்மைகள் உட்பாய்ச்சக்கூடியது.
   4) வியாபாரத்திற்குச் சட்ட ரீதியாகச் சொந்தமாக்கப்பட்டிருத்தல்.
   5) நிறுவனத்தினால் கட்டுப்படுத்தக்கூடியதாக இருத்தல் (……....)

02. நுட்ப மற்றும் தொழில்சார் சூழலுக்குரிய மாறிகளை கொண்டதொகுதி யாது?
   1) கணிணி தொழில்நுட்பம், நவீன தொழில்நுட்பம், தொடர்பாடல் தொழில்நுட்பம்
   2) மனப்பாங்கு, நடை உடை பாவனை, பழக்கம், நம்பிக்கை
   3) வரிக்கொள்கை, நாணயமாற்று விகிதம், வட்டவீதம், சந்தை நிலைமை
   4) கணக்கீட்டு நியமங்கள், கணக்கீட்டு நுட்பமுறைகள், கணக்கீட்டு தொழில்சார் நிறுவனங்கள்.
   6) கம்பனிச்சட்டம், பங்குடைமைச்சட்டம், உள்நாட்டு இறைவரிச்சட்டம் (……....)

03. காசுக் கொடுப்பனவு நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படாதது.
   1) காப்புறுதி கொடுப்பனவு
   2) சம்பளம் கொடுப்பனவு
   3) கடன் கொடுநருக்கு கொடுப்பனவு
   4) தளபாடக்கொள்வனவு
   5) வங்கிக்கட்டணம் (……....)

04. வியாபாரமொன்றின் இலாபத்தைக் கணீப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தக்கூடிய சமன்பாடு யாதெனில்
   1) இறுதிதேறியசொத்து + ஆரம்பதேறியசொத்து + பற்று +மேலதிக மூலதனம்
   2) இறுதிதேறியசொத்து - ஆரம்பதேறியசொத்து + பற்று – மேலதிக மூலதனம்
   3) இறுதிதேறியசொத்து - ஆரம்பதேறியசொத்து - பற்று +மேலதிக மூலதனம்
   4) ஆரம்பதேறியசொத்து - இறுதிதேறியசொத்து - பற்று +மேலதிக மூலதனம்
   5) ஆரம்பதேறியசொத்து + இறுதிதேறியசொத்து - பற்று +மேலதிக மூலதனம்

(……....)

05. ஒரு இயந்திரத்தின் கிரயம் ரூபா 500,000 ஆகவும் அதன் பயன்தரு ஆயுட்காலம் 10 வருடங்களாகவும் இருந்தது. இவ்வியந்திரத்தின் முதல் ஐந்து வருடங்களிற்கான திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 225,000 ஆகும் கம்பனியானது தனது இயந்திரங்களை நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்விடுகிறது. இவ்வியந்திரத்தின் பெறுமானத் தேய்வு செய்யக்கூடிய தொகை யாது?

1) ரூபா 50 000 2) ரூபா 500 000 3) ரூபா 450 000

4) ரூபா 400 000 5) ரூபா 225 000

(……....)

06. ஒரு நிறுவனத்தின் சரக்கிருப்பு பின்வரும் உருப்படிகளைக்கொண்டுள்ளது.

உருப்படி	அலகுகள்	கிரயம்ரூபா	தேறிய தேறக்கூடிய பெறுமதி ரூபா
X	200	10	12
Y	250	12	15
Z	500	11	10

உருமப்படி அடிப்படையில் நிறுவனத்தின் சரக்கிருப்பின் பெறுமதி யாது?

1) ரூபா 10500 2) ரூபா 11150 3) ரூபா 10000

4) ரூபா 12150 5) ரூபா 12000 (……....)

07. பொதுவிலைமாட்டம் தொடர்ச்சியாக அதிகரிக்கையில் வரலாற்றுக் கிரய அடிப்படையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது தாக்கத்திற்கு உட்படும் பிரதான கணக்கீட்டு தகவலின் பண்புசார் சிறப்பியல்வு பின்வருவனவற்றுள் எது?

1) பொருத்தப்பாடு 2) உண்மையான பிரதிநிதித்துவம் 3) ஒப்பிடக்கூடிய தன்மை

4) காலந்தவறாமை 5) விளக்கக்கூடியதன்மை (……....)

agaram.lk

08. நிறுவனமொன்றின் தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன

	ரூபா	
2016.04.01 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதி		180 000
கடன்பட்டோரிடமிருந்து பெறப்பட்ட காசு	750 000	
கடன் விற்பனைகள்	880 000	
ஐயக்கடன்களுக்கான ஏற்பாடு 2016.04.01 இல்	18 000	

வருட இறுதியில் உள்ள கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கு மீதிக்கு 10% ஐயக்கடன் ஏற்பாடு செய்வது இந்நிறுவனத்தின் கொள்கையாகும்.

2017.03.31 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு. கணக்கு மீதி யாது?

1) ரூபா 310 000 2) ரூபா 292 000 3) ரூபா 45 000

4) ரூபா 68 000 5) ரூபா 55 000 (……....)

09. ஒரு வணிக நிறுவனம் ரூபா 500 000 பெறுமதியான சரக்குகளை 30% வியாபார கழிவுடன் கடனிற்கு கொள்வனவு செய்தது. மேலும் கொடுப்பனவை தீர்த்துக் கொள்ளும் போது 10% காசுக் கழிவினையும் பெற்றுள்ளது. காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் இக் கொடுக்கல் வாங்கலானது எப்பொறுமதியில் பதியப்படும்

1) ரூபா 350 000 2) ரூபா 315 000 3) ரூபா 500 000

4) ரூபா 450 000 5) ரூபா 320 000 (……....)

10. தனி வியாபாரமொன்று 2017.03.31 இல் முடிவுற்ற மாதத்திற்கான கட்டிட வாடகை ரூபா 30,000 இற்கு பதிலாக ரூபா 25,000 கிரயமான பண்டங்களை வழங்கியது. கீழே தரப்பட்டுள்ள சமன்பாடுகளில் எது மேற்கூறப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தாக்கத்தைக் காட்டுகின்றது.

	சொத்துக்கள்	= பொறுப்புக்கள்	+ உரிமையாண்மை
1)	- 25000	+5000	- 30 000
2)	- 25000		- 25 000
3)	- 30000	+5000	- 25 000
4)	-30000		- 30000
5)	– 30000	+5000	- 30000

(……....)

11. பின்வரும் தகவல்கள் கம்பனியொன்றினால் 01.01.2018 இல் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரமொன்றுடன் தொடர்பானனவ. இக்கம்பனி பெறுமதி சேர் வரிக்காகப் (VAT) பதியப்பட்டுள்ளது.

	ரூபா
இயந்திரத்தின் பட்டியல் விலை	250 000
பெறுமதிசேர் வரி செலுத்தியது	37 500
இயந்திரத்தைப் பொருத்துவதற்கு முன்னர் வேளைத்தளத்தை ஆயத்தப்படுத்தல்	15 000
இயந்திரத்தை பொருத்துவதற்கான கிரயம்	15 000
இயந்திர பாரமரிப்பு கிரயம்	5000
செயற்பாட்டு நிலையில் இருந்தவேளை உதிரிப்பாகங்களைமாற்றி அமைத்தல் கிரயம்	10000

கொள்வனவின் போது 10% வியாபாரக்கழிவு பெறப்பட்டது. LKAS-16 இன்படி ஆரம்ப இனங்காணவில் இயந்திரக்கியம் யாது?

1) ரூபா 280 000 2) ரூபா 317 500 3) ரூபா 332 500
4) ரூபா 307 500 5) ரூபா 225 000 (……....)

agaram.lk

12. வியாபாரமொன்றில் 31.12.2017 இல் முடிவடைந்த கணக்காண்டில் செலுத்தப்பட்ட வாடகை ரூபா 200,000 ஆகும். 31.12.2016 இல் முடிவடைந்த வருடம் தொடர்பாக மாதாந்த வாடகை ரூபா 20,000 ஆகும் 31.12.2017 இல் முடிவடைந்த வருடத்திற்கான மாதாந்த வாடகை ரூபா 25,000 ஆகவும் இருந்து. 31.03.2017 இல் முடிவடைந்த நிதிக்கூற்றுக்களில் காட்டத்தக்க வாடகையானது.

1) ரூபா 200 000, ரூபா 50 000
2) ரூபா240 000, ரூபா 40000
3) ரூபா 300 000, ரூபா 100 000
4) ரூபா 255 000, ரூபா 55000
5) ரூபா 250 000, ரூபா 50 000 (……....)

13. பின்வரும் தகவல்கள் உற்பத்தி நிறுவனமொன்றின் 2017 மார்ச் மாதத்துடன் தொடர்புடையதாகும்

பயன்படுத்தியநேர் மூலப்பொருடகள்	ரூபா	300 000
முடிவுசரக்கிருப்பில் குறைவு	ரூபா	100 000
குறைவேலையில் அதிகரிப்பு	ரூபா	300 000
நேர்க்கூலி	ரூபா	200 000
தொழிற்சாலை மேந்தலை	ரூபா	150 000

நிறுவனத்தில் 2017 மார்ச் மாதத்துக்கான விற்பனைக்கிரயம் யாது?

1) ரூபா 450 000 2) ரூபா 850 000 3) ரூபா 350 000
4) ரூபா 250 000 5) ரூபா 650000 (……....)

14. நிறுவனமொன்று எல்லாக் காசுப் பெறுவனவுகளைத் தினமும் வங்கியில் வைப்பிலிடுவதுடன் எல்லாக் கொடுப்பனவுகளையும் காசோலைகளினூடாகச் செய்கின்றது. பின்வருவன நிறுவனத்திற்கான மாதமொன்றுடன் தொடர்பான தகவல்கள் ஆகும்

- மாதத்தொடக்கத்திலுள்ள வங்கிக்கூற்று மீதி காசுக்கட்டுப்பாட்டு கணக்கு மீதிகள் முறையே ரூபா 15000, ரூபா 8000 ஆகும் இம்மீதிகளுக்கிடையிலான வேறுபாடு சமர்ப்பிக்கப்படாத காசோலைகளினால் ஏற்பட்டதாகும்.
- காசுப்பெறுவனவு நாட்குறிப்பேட்டின் மொத்தம் ரூபா 130000
- காசுப்பெறுவனவு நாட்குறிப்பேட்டின் மொத்தம் ரூபா 80000
- மாதக் கடைசியில் காணப்படும் காசுக் கட்டுப்பாட்டு கணக்கு மீதிகளுக்கிடையிலான வேறுபாட்டிற்கு ஒரேயொரு காரணமாக இருப்பது வங்கிக்கூற்றில் காணப்படும் வங்கிக் கட்டணம் ரூபா 2000 ஆகும்

வங்கிக்கூற்றின்படி மாத முடிவிலுள்ள மீதி எது?

1) ரூபா 52 000 2) ரூபா 63000 3) ரூபா 56 000

4) ரூபா 58 000 5) ரூபா 65000 (……....)

15. இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் படி பெறுமானத்தேய்வு என்பது

1) சொத்தொன்றினை பாவனை செய்வதனால் எழும் பெறுமதி குறைவை ஒழுங்குமுறையாகப் பதிவழித்தல்
2) நடைமுறைச் சந்தை பெறுமதியை வெளிப்படுத்தகூடியவாறு சொத்தின் பெறுமதியைச் சீராக்குதல்
3) சொத்தொன்றின் மீள் வைத்தலுக்காக நிதியினை ஒழுங்கு முறையாக ஏற்பாடு செய்தல்
4) ஒரு சொத்தொன்றின் பெறுமானத் தேய்விடத்தக்க தொகையை அச்சொத்தின் பயன்தரு ஆயூட்காலம் முழுவதும் ஒழுங்கு முறையாகப் பகிர்ந்து ஒதுக்கும் தொகை
5) சொத்தொன்றின் சந்தைப் பெறுமதி குறைவை இதன் பயன்தகு ஆயூட்காலத்திற்கு ஒழுங்கு முறையாகப் பகிர்ந்து ஒதுக்குதல் (……....)

agaram.lk

❖ **16 தொடக்கம் 25 வரையான வினாக்களுக்கு சுருக்கமான விடை தருக.**

16. பொதுப்பேரேட்டில் பேணப்படும் பின்வரும் கணக்குகளுக்குப் பொருத்தமான வகைப்படுத்தலைக் குறிப்பிடுக?

கணக்கு	வகைப்படுத்தல்
1. ஐயக்கடன் ஏற்பாடு	…………………………..
2. உட்திரும்பல்	…………………………..
3. முற்பண வாடகை வருமானம்	…………………………..
4. பெறுமானத்தேய்வு	…………………………..

17. நிறுவனமொன்றின் பொது நாட்குறிப்பேட்டில் பதியப்படும் நான்கு வகையான கொடுக்கல் வாங்கல்களைக் குறிப்பிடுக?

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………..

18. பின்வரும் கூற்றுக்களில் எது சரி எது பிழை என்பதைப் பொருத்தமான நிரலில் அடையாளமிடுவதன் மூலம் காட்டுக.

கூற்று	சரி	பிழை
1) காசுப்பற்று, மேலதிக மூலதனம் இலாபத்தில் அல்லது நட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும்	…………………	………………
2) தொங்கல் கணக்கு மீதி உருவாவதற்குக் காரணமான வழுக்கள் இலாபத்தில் தாக்கத்தை ஏற்படுத்தாது	…………………	………………
3) இருப்புக்கிரயத்தை மதீப்பீடு செய்வதற்கு பயன்படுத்தப்படும் இருப்புக்கிரயம், தேறிய தேறத்தக்க பெறுமதிகளில் எது குறைவோ அதனைப்பயன்படுத்துதல் முன்னெச்சரிக்கை எண்ணக்கருவுடன் ஒத்திருக்கின்றன.	…………………	………………
4) முற்பண முறை சில்லறைக் காசேட்டின் படி ஒவ்வொரு குறிப்பிட்ட கால முடிவில் நிலையான பணத்தொகை யொன்று மீள் நிரப்படுகின்றது	…………………	………………

19. வணிக நிறுவனமொன்றில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்குரிய முதன்மை ஏட்டினையும் அதனுடன் தொடர்புடைய மூல ஆவணத்தையும் குறிப்பிட்டுக் காட்டவும்

கொடுக்கல் வாங்கல	**முதன்மை ஏடு**	**மூல ஆவணம்**
எழுதுகருவிப் பொருட்கள் அலுவலகம் தேவைக்கு கடனுக்கு கொள்வனவு		
காசு விற்பனைகள்		

agaram.lk

20. சந்தோஷ் வணிகம் தனது சில்லறைக் காசு கொடுப்பனவுகளை முற்பண முறையில் கட்டுப்பாடு செய்கின்றது. வசக்கட்டுநிதி ஒவ்வொரு மாத முதல் திகதியில் மீள்நிரப்பப்படுகின்றது. 2018.01.01 இல் கையில் உள்ள சில்லறைக்காசு மீதி ரூபா 650

மாதம்	**உபசரிப்பு**	**அஞ்சல்**	**போக்குவரத்து**	**ஏனைய கொடுப்பு**
ஜனவரி	450	630	420	800
பெப்ரவரி	420	550	350	950

2018.03.01 ல் உள்ள சில்லறைக் காசு மீதி ரூபா 230

i) 2018 ஜனவரி 01 இல் வசக்கட்டுநிதி மீள்நிரப்பப்பட்ட பெறுமதி யாது?

………………………………………………………………………………………

ii) 2018 பெப்ரவரி 01 இல் வசக்கட்டுநிதி மீள்நிரப்பல் தொடர்பான நாட்டுறிப்பு பதிவை தருக?

………………………………………………………………………………………

………………………………………………………………………………………

- 21 ஆம் 22 ஆம் வினாக்களுக்கு வடையளிக்கும் போது பின்வரும் தகவல்களைப் பயன்படுத்துக.

  நிறுவனமொன்றிற்கு 2018 மார்ச்சின் ஏற்பட்ட ரூபா 50000 தொகையான அலுவலகச் செலவானது அலுவலக உபகரணக்கணக்கில் ரூபா 500 000 ஆகப்பதியப் பட்டுள்ளது. அலுவலக உபகரணக் கணக்கில் ரூபா 500 000 ஆகப்பதியப்பட்டுள்ளது. அலுவலக உபகரணமானது வருடாந்தம் 12% நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப்படுகின்றது. உபகரணத்திற்கு அந்த மாதத்திற்கான பெறுமானத்தேய்வும் செய்யப்பட்டுகின்றது.

21. 31.3.2018 இல் முடிவடைந்த வருடத்துக்கான இலாபத்தில் இப்பிழையினால் ஏற்பட்ட தேறிய விளைவு என்ன?

   ………………………………………………………………………………………………..

22. அலுவலக உபகரணங்கள், அலுவலகச் செலவுகள் ஆகியவற்றுக்கான பேரேட்டுக் கணக்குகளைச் சீராக்குவதற்கான நாட்குறிப்புப் பதிவுகளை எழுதுக.

   ………………………………………………………………………………………………
   ………………………………………………………………………………………………
   ………………………………………………………………………………………………

23. விற்பனைக் கிரயத்தை ஒரு செலவினமாகவும் வருட முடிவிலுள்ள சரக்கிருப்பைச் சொத்தொன்றாகவும் மிகச்சிறப்பாக இனங்காணப் பயன்படுத்தப்படும் எண்ணக்கரு எது?

   ………………………………………………………………………………………………

24. கணக்கீட்டில் அக்கறை செலுத்தும் பிரிவினர் நால்வரைக் குறிப்பிடுக?

   ………………………………………………………………………………………………
   ………………………………………………………………………………………………
   ………………………………………………………………………………………………

25. நிறுவனமொன்றின் கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் ஏனைய பகுதியினரின் சுதந்திரத்தைப்பேணும் வகையில் பதிவிடுவதற்கு அனுமதிக்கும் கணக்கீட்டு எண்ணக்கரு யாது?

   ………………………………………………………………………………………………
   ………………………………………………………………………………………………

agaram.lk

பகுதி II

அறிவுறுத்தல்கள் :-

- ❖ **முதலாம் வினா உட்பட எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**
- ❖ **விடைத்தாளை பகுதி I உடன் இணைந்து மேற்பார்வையாளரிடம் கையளிக்குக.**

01. வினோ நிறுவனத்தில் 2017.12.31 இல் உள்ளவாறான பரீட்சை மீதி வருமாறு

விபரம்	வரவு	செலவு
காணி – கிரயத்தில்	1000 000	
கட்டிடம் - கிரயத்தில்	800 000	
மோட்டார் வாகனங்கள் - கிரயத்தில்	600 000	
அலுவலக உபகரணங்கள் - கிரயத்தில்	250 000	
12% வங்கிக்கடன்		1000 000
வியாபார வருமதியாளர்	75 000	
2017.01.01 இல் சரக்கிருப்பு	40 000	
கொள்வனவுகள்	300 000	
அலுகலகச் செலவு	5000	
காப்புறுதி	6000	
மின்சாரம்	3000	
2017.01.01 இல் பெறுமானத்தேய்வு ஏற்பாடு		
• கட்டிடம்		150 000
• மோட்டார்வாகனம்		100 000
• அலுவலக உபகரணம்		50 000
வியாபார சென்மதியாளர்		50 000
வெளித்திரும்பல்		20 000
விற்பனைகள்		615 000
பெற்ற கழிவு		30 000
மூலதனம்		1250 000
01.01.2017 இல் ஐயக்கடன் ஏற்பாடு		15 000
தொலைபேசிக்கட்டணம்	4 500	
வாகன பராமரிப்பு	6 500	
உட்திரும்பல்கள்	15 000	
உட்சுமைக்கூலி	20 000	
வெளிச்சுமைக்கூலி	16 000	
சம்பளமும் கூலியும்	27 000	
வங்கிச்சேவைக்கட்டணம்	6000	
வங்கி	90 000	
பெறுமதி சேர்வரி (VAT)	16 000	
	3280 000	**3280 000**

agaram.lk

மேலதிக தகவல்கள் :

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது பின்வரும் சீராக்கங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

1) சரக்கிருப்புப் பதிவேடுகளின்படி 31.12.2017 இல் சரக்கிருப்புக்களின் கிரயமானது ரூபா 50000 ஆகும்.
2) 2017.12.31 இல் காணப்பட்ட முற்பணக்காப்புறுதி ரூபா 2000
3) 2017.12.31 இல் அட்டுறு செலவுகள் - மின்கட்டணம் ரூபா 1000, தொலைபேசிக்கட்டணம் ரூபா 500
4) வருட காலத்தில் உரிமையாளர் பற்றிய பொருட்கள் ரூபா 10 000 ஆகும். இதற்கான பதிவுகள் சரக்கிருப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.
5) 2017.12.31 இல் காணப்பட்ட வியாபார வருதியாளரில் ரூபா 5000 இனை அறவிட முடியாக்கடனாகப் பதிவழிப்பதுடன் மிகுதி வியாபார வருமதியாளரில் 10% ஐயக்கடனுக்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.
6) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு பின்வருமாறு ஆண்டுக்கு தேய்விடப்படல் வேண்டும்.
   - கட்டிடம் மற்றும் அலுவலக உபகரணங்களுக்கு கிரயத்தில் 10%
   - மோட்டார் வாகனத்திற்கு ஒடுங்குபாக மீதி முறையில் 20% ஆகும்.
7) ஊழியர் சேமலாபநிதிக்கு (EPF) ஊழியர் பங்களிப்பு 10% தொழில் வழங்குனர் பங்களிப்பு 15% ஆகும். இவ்வாண்டுக்கான ஊழியர் சேமலாப நிதிக்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. ஊழியர் பங்களிப்பினை கழித்து சம்பளம் செலுத்தப்பட்டது.

வேண்டப்படுவது :-

1) 2017.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்று
2) 2017.12.31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று. (20 புள்ளிகள்)

02. மேனகா வணிகத்தின் 2018.01.01 இல் உள்ளவாறான சொத்துக்கள் பொறுப்புக்கள் பின்வருமாறு

	ரூபா
கட்டிடங்கள் கிரயத்தில்	1000 000
கட்டிடத்திற்கான பெறுமானத்தேய்வு ஏற்பாடு	400 000
சரக்கிருப்பு	100 000
வியாபார வருமதியாளர்	150 000
ஐயக்கடனுக்கான ஏற்பாடு	15 000
வங்கியிலுள்ள காசு	50 000
வியாபார சென்மதியாளர்	80 000

2018 ஜனவரி மாதத்தில் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றுள்ளன.

1) ரூபா 400 000 கிரயம் கொண்ட சரக்குகள் ரூபா 600 000 இற்கு காசுக்கு விற்கப்பட்டது.
2) ஊழியர் சம்பளம் செலுத்தியது ரூபா 40 000.
3) சில்வாவிடம் கடனுக்கு கொள்வனவு செய்த சரக்குகள் ரூபா 500 000.
4) ரூபா 200 000 பெறுமதியான சரக்குகள் அப்துல்லாவுக்கு ரூபா 300 000 இற்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்டது.
5) ஜனவரி மாதத்திற்கு கிடைக்கப்பெற்ற மின்சாரப்பட்டியலின் பெறுமதி ரூபா 20 000.
6) கட்டடங்கள் வருடாந்தம் குன்று மீதியில் 10% பெறுமானாத் தேய்விடப்பட்டன.
7) சென்மதியாளருக்கு செலுத்திய காசோலை ரூபா 400 000.
8) உரிமையாளர் ரூபா 200 000 இனை காசாக வியாபாரத்தில் முதலிட்டுள்ளார்.
9) மேனகா வீட்டில் நடத்தப்பட்ட நிகழ்விற்காக ரூபா 50 000 பெறுமதியாள சரக்குகள் வணிகத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டது.
10) மாத இறுதியில் காணப்படும் வருமதியாளர் மீதி மீது ஐயக்கடன்களிற்கான 10% ஏற்பாடு செய்யப்பட்டன.

agaram.lk

வேண்டப்படுவது :-

1) ஆரம்ப மீதிகளை வகைப்படுத்தி அதன் மொத்தங்களை ஐநதொகைச் சமன்பாட்டில் பதிக.
2) சொத்து = மூலதனம் + (வருமானம் - செலவு) + பொறுப்பு என்ற சமன்பாட்டிற்கு மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏற்படுகின்ற தாக்கத்தை (+) அல்லது (–) என்றவாறு பெறுமதிகளுடன் எழுதிக் காட்டுக.
3) தேறிய சொத்துக்களின் உதவியுடன் 2017 ஜனவரி மாத இலாபம் / நட்டத்தைக் கணிக்குக.

(10 புள்ளிகள்)

03. கபிலன் வணிகத்தின் 2018 ஜனவரி மாதத்தில் இடம்பெற்ற பின்வரும் கொடுக்கல் வாங்கல்களைக் கருத்திற் கொண்டு வினவப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடையளிக்குக.

வருமதியாளர்	2018.01.01 இல் மீதி	மொத்த விற்பனைகள்	கடன் விற்பனைகள் மொத்த விற்பனைகளில்	உட்திரும்பல்	பெற்ற காசு	கொடுத்த கழிவு
மதன்	22 000	500 000	80%	10 000	300 000	10 000
சுதன்	35 000	600 000	90%	-	500 000	5 000
பவன்	20 000	300 000	70%	5 000	200 000	20 000
நாதன்	(10 000)	200 000	80%	20 000	130 000	-
கரன்	5 000	100 000	75%	-	80 000	15 000

வேண்டப்படுவது :-

1) காசுப்பெறுவனவு நாட்டுகுறிப்பேடு, விற்பனை நாட்குறிப்பேடு, உட்திரும்பல் நாட்குறிப்பேடு.
2) பொதுப்பேரேட்டிலுள்ள கணக்குகள்.
3) கடன்பட்டோர் துணைப்பேரேட்டிலுள்ள கணக்குகளும் மீதிப்பட்டியலும்.

(10 புள்ளிகள்)

04. கோபிகா வணிகத்தின் 2017.03.31 இரு முடிவடையும் வருடத்தில் கணக்கு வைப்பின் போது ஏற்பட்ட வழுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1) அமலனுக்கு செய்த கடன் விற்பனைக்கான பட்டியல் ரூபா 30 000 ஏடுகளில் விடுபட்டிருந்தது.
2) 01.10.2016 இல் செலுத்திய அலுவலகச் செலவுகள் ரூபா 20 000 ஆனது காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கில் சரியாகப்பதியப்பட்டுள்ள போதும் அலுவலக உபகரணக்கணக்கில் ரூபா 200 000 ஆகப் பதியப்பட்டுள்ளது. இந்த உபகரணத்திற்கு பெறுமானத்தேய்வாக வருடாந்தம் கிரயத்தில் 10% இடப்பட்டுள்ளது.
3) செலுத்த வேண்டிய மின்சாரம் ரூபா 5000 இருமுறை ஏடுகளில் பதியப்பட்டிருந்தது.
4) செலுத்தப்பட்ட சம்பளம் ரூபா 11000 சம்பளக்கணக்கில் ரூபா 110 000 என பதிவிடப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது :-

1) இத்தவறுகளை திருத்துவதற்கான காசு உள்ளிட்ட நாட்டுகுறிப்புப் பதிவுகள்

(05 புள்ளிகள்)

ஆ) வியாபாரமொன்றின் வங்கிக்கூற்றானது 31.01.2018 இல் ரூபா 10 000 வரவு மீதியைக் காட்டியது. இத்தினத்தில் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கானது பிரிதொரு மீதியைக் காட்டியது. இதனைத் தொடர்ந்து பரிசீலனை செய்தபோது பின்வரும் தகவல்கள் வெளிக்கொணரப்பட்டன.

1) நிலையான கட்டளையின் பேரில் வங்கியினால் செலுத்திய ரூபா 12000 காப்புறுதிக்கட்டணமானது காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.
2) நேரடியாக வங்கியில் இடப்பட்ட நிலையான வைப்பின் மீதான வட்டி ரூபா 48000 ஆனது காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

agaram.lk

3) வைப்பிலிடப்பட்டுள்ள ரூபா 100 000 காசோலையொன்று வங்கியினால் மறுக்கப்பட்டுள்ளது. எனினும் காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கில் இது பதியப்பட்டிருக்கவில்லை.
4) வங்கியில் வைப்பிலிடப்பட்ட ரூபா 120 000 காசோலைகள் இன்னமும் வசூலிக்கப்படவில்லை.
5) சென்மதியாளருக்கு கொடுத்த ரூபா 80 000 காசோலைகள் இன்னமும் வங்கியில் கொடுப்பனவுகளுக்காகச் சமர்ப்பிக்கப்படவில்லை.

வேண்டப்படுவது :-

1) 31.01.2018 இல் வங்கி இணக்கக்கூற்று.
2) 31.01.2018 இல் உள்ளவாறான காசுக்கட்டுப்பாட்டுக்கணக்கின் சீராக்க முன் மீதி.

(05 புள்ளிகள்)

05. பின்வருடம் அட்டவணையானது வரையறுத்த நசார் கம்பனியின் 31.12.2017 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இயந்திரங்கள் தொடர்பானதாகும்.

இயந்திர வகை	கிரயம் ரூபா	கொள்வனவுத் திகதி	எஞ்சிய பெறுமதி (ரூபா)	பயன்தரு ஆயூட்காலம்
இயந்திரம் A	180 000	2016.01.01	30 000	10
இயந்திரம் B	60 000	2016.01.01	-	5
இயந்திரம் C	75 000	2016.06.30	5 000	7

வரையறுத்த நசார் கம்பனி இயந்திரங்களுக்கு நேர்கோட்டு முறையில் பெறுமானத்தேய்வு செய்யத் தீர்மானித்துள்ளனர். அவர்களது நிதியாண்டு ஒவ்வோர் ஆண்டும் டிசெம்பர் 31 ஆந் திகதியன்று முடிவுறும்.

தொழில்நுட்ப மாற்றங்கள் காரணமாக 2017 ஜனவரி மாத்தின் தொடக்கத்தில் கம்பனி பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றியது.

agaram.lk

1) ரூபா 125 000 கிரயத்தில் இயந்திரம் A மீது முழுமையான புதுப்பித்தல் வேலை மேற்கொள்ளப்பட்டது. இப்புதுப்பித்தல் காரணமாக இயந்திரம் Aயின் பயன்தரு ஆயூட்காலம் 2017 ஜனவரி 01 ஆந் திகதியிலிருந்து 12 ஆண்டுகளுக்கு விரிவெய்தியது. இக்காலத்தின் முடிவின் எஞ்சியபெறுமதி ரூபா 50 000 ஆக இருக்குமென மதிப்பிடப்பட்டது.
2) இயந்திரம் B வழக்கிழந்து போய்விட்டதெனத் தீர்மானிக்கப்பட்டது. அது மீள் விற்பனைக்கான பெறுமதி எதனையும் கொண்டிராததால் ஏடுகளிலிருந்து முழுமையாகப் பதிவழிக்கப்பட்டது.
3) இயந்திரம் C ரூபா 20 000 எனும் தொகைக்கு விற்கப்பட்டது.

வேண்டப்படுவது :-

2017 ஆம் ஆண்டுக்கு வணிகத்தின் பின்வரும் பேரேட்டுக்கணக்குகள்

1) இயந்திரக் கணக்கு
2) இயந்திர பெறுமானத்தேய்வுக் கணக்கு
3) இயந்திர பெறுமானத் தேய்வு ஏற்பாட்டுக் கணக்கு
4) இயந்திர அகற்றல் கணக்கு

(10 புள்ளிகள்)